[සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
[All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2019

தரம் 5

சுட்டெண்: .....

செயலட்டை 11

புள்ளிகள் 30

- ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள பாடல்களைப் படித்து வினாக்களுக்குரிய விடையைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.

1.
இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது.

1) அறம் என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக. : .....

2) தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை? : .....

3) இப்பாடலில் இடம் பெறும் உயர்திணை ஆண்பாற் பெயர்ச் சொல் யாது?
: .....

4) இங்கு இடம் பெறும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக.
: .....

5) சிறிது என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக. : .....

6) விசிறி என்ற உயிர்க்குறி இடப்பட்டுள்ள இரண்டு சொற்களை எழுதுக.
: ....., ...

7) உலகங்களில் என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. : .....

2.
அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்.

1) பாடலில் வந்துள்ள இணை மொழி யாது? : .....

2) கல்வியை நாம் எவ்வாறு கற்க வேண்டும்? : .....

3) தீமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : .....

4) பாடலின் முதல் வரியில் இடம் பெற்றுள்ள அடைமொழியை எழுதுக.
: .....

5) படித்து என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக. : .....

6) பாடலில் இடம் பெறும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக.
: .....

3.
சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது

1) குருவி எதனைக் காற்றில் உதைக்கிறது? : .....

www.ikeju.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

2) இங்கு இடம்பெறும் பெயர் அடைமொழியை எழுதுக. : .....

3) சிரிக்கிறது என்பது எக்காலத்திற்குரிய சொல்? : .....

4) பாடலில் இடம்பெறும் தன்மை ஒருமை வினைமுற்றை எழுதுக.

: .....

5) பாடலில் வந்துள்ள அ.ஃறிணை ஒருமை
நிகழ்கால வினைச்சொல் ஒன்றை எழுதுக. : .....

6) அழுகிறது என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.

: .....

4. கல்லைச் சிற்பி கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்.

1) சிற்பமாக மாற்றப்பட்டது எது? : .....

2) சிலை செய்பவன் என்ற தொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

: .....

3) புகழ்ந்தனர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக: .....

4) பாடலில் வந்துள்ள உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

: .....

5) இரட்டைக் கொம்பும் அரவும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பாடலில் இருந்து
கண்டு பிடித்து எழுதுக. : .....

6) கண்களை என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. : .....

5. சத்தியம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை

1) வாய்மை என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. : .....

2) அதருமம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : .....

3) 'இவ்வுலக மாந்தர்' என்ற கருத்தைத் தரும் சொற்றொடரை எழுதுக.

: .....

4) பாடலில் குறிப்பிடப்படுபவரின் கொள்கைகளில் ஒன்று பாடலின் இரண்டாம்
வரியிலும் காணப்படுகிறது. அக்கொள்கையை எழுதுக : .....

5) பாடலில் இடம்பெறும் தொழிற் பெயர்ச் சொற்கள் இரண்டை எழுதுக.

: ..... , ...

www.ikedu.lk

[සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
[All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2019

தரம் 5

சுட்டெண்: .....

செயலட்டை 12

புள்ளிகள் 25

- பின்வரும் வாக்கியம் / பந்தியிலிருந்து கேட்கப்பட்ட ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. நாம் எமது உடலை நோய் வராமல் பாதுகாத்தல் வேண்டும்.

   1) பிணி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

   : .....

   2) எனது என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக.

   : .....

   3) வாக்கியத்தில் வந்துள்ள தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் எது?

   : .....

   4) உடலை என்ற சொல்லில் இடப்பட்டுள்ள உயிர்க் குறியின் பெயரை எழுதுக.

   : .....

   5) நாம் எதனை நோய் வராமல் பாதுகாத்தல் வேண்டும்?

   : .....

2. ஆண்டுகள் பல கழிந்தன. தசரதன் தன்னுடைய மூத்த மகனான இராமனுக்கு முடிசூட்ட விரும்பினான். அவ்வாறே நல்ல நாளில் முடிசூட்டுவதற்கு முடிவு செய்தான்.

   1) வருடங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

   : .....

   2) சில என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

   : .....

   3) தசரதனின் மூத்த மகன் யார்? : .....

   4) பந்தியில் வந்துள்ள பெயரடை மொழி ஒன்றை எழுதுக

   : .....

   5) இரட்டைக்கொம்பு இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

   : .....

   6) பந்தியில் வந்துள்ள உயர்திணை ஒருமை இறந்தகால வினைமுற்று ஒன்றை எழுதுக.

   : .....

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

3. நாம் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். பழங்கள், கீரை வகைகள், காய்கறிகள் உண்பது நல்லது. தினமும் காலையில் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். மாலை நேரங்களில் ஓடி ஆடி விளையாட வேண்டும்.

1) கனிகள் என்பன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
: .....

2) காலை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
: .....

3) இங்கு இடம் பெறும் தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் எது?
: .....

4) பந்தியில் வந்துள்ள இணைமொழியை எழுதுக.
: .....

5) நாம் தினமும் காலையில் யாது செய்தல் வேண்டும்?
: .....

6) நாம் எது உள்ள உணவுகளை உண்ண வேண்டும்? : .....

7) உடற்பயிற்சி என்பதைப் பிரித்து எழுதுக. : ..... + ...

4. அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோக சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதனால், நன்றாக மழை பொழிந்தது, விவசாயம் செழித்தது, மக்கள் நலமுடன் வாழ்ந்தனர்.

1) அசோகச் சக்கரவர்த்தி மரங்களை எங்கு நட்டார்? : .....

2) அவர் மரங்களை நட்டதனால் நாட்டுக்குக் கிடைத்த பயன்களில் ஒன்றை எழுதுக.
.....

3) மரக்கன்றுகளை என்பதைப் பிரித்து எழுதுக. : ..... + ...

4) பந்தியில் இடம்பெறும் உயர்திணைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.
: .....

5. கிராமிய விளையாட்டுக்கள், வீரத்தையும் விவேகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன. விளையாட்டில் சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் என எல்லோரும் ஈடுபடுகின்றனர். இவ்விளையாட்டுக்கள் மூலம் அனுபவமும் திறனும் ஏற்படுகின்றன.

1) கிராமிய விளையாட்டுக்கள் எவற்றை வெளிப்படுத்துகின்றன?
....., ..., ...

2) கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் யாவர்?
....., ..., ..., ...

3) கிராமிய விளையாட்டுக்கள் மூலம் ஏற்படுபவை எவை?
.....

www.lkedu.lk